**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the Judicial Magistrate, Fast Track Court, Palani.**

**CC. 45/2020**
**Dw4 Chief Examination**

| | | |
|---|---|---|
| **Name** | **:** | **விஜயலட்சுமி** |
| **Father/Husband's Name** | **:** | **கனகராஜ்** |
| **Age** | **:** | **57** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 03.07.2026.**

**(புகார்தாரர் – ஆஜர்)**

**எதிரி ஆஜர். எதிரி சத்யப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் எதிரி ஆவேன். இவ்வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். நான் பழனி தாலுகா நல்லூர் பிரிவில் சொந்தமாக இம்மானுவேல் பேப்பர் & போர்ட்ஸ் என்ற பெயரில் அட்டை தயாரிப்பு கம்பெனி நடத்தி வருகிறேன். இந்நிலையில் கடந்த 01.12.2016 ஆம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் சாமிநாதபுரத்தைச் சேர்ந்த வெங்கடாச்சலமும் எனது மில்லை வாய்மொழியாக பேசி வாடகைக்கு எடுத்து நடத்தி வந்தார். நானும், மேற்படி நபர்களும் வாய்மொழியாக மாத வாடகை ரூ.20,000/– கொடுக்கவேண்டும் என பேசிக்கொண்டோம். அதன் பிறகு கடந்த 01.02.2017 ஆம் தேதி முதல் மேற்படி வெங்கடாச்சலம் விலகிக்கொள்வதாகவும் இவ்வழக்கின் புகார்தாரர் மட்டும் எனது மில்லை நடத்தப்போவதாக என்னிடம் கூறினார். அதன்படி நானும், இவ்வழக்கின் புகார்தாரரான ஈஸ்வரனும் கடந்த 01.02.2017 ஆம் தேதி வாடகை உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம். அதனை இவ்வழக்கின் தாக்கல் செய்கிறேன். **(கடந்த 01.02.2017 ஆம் தேதியிட்ட வாடகை உடன்படிக்கை பத்திரம் அசல் எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. நான் இம்மானுவேல் பேப்பர் & போர்ட்ஸ் பெயரில் மடத்துக்குளத்தில் உள்ள கனரா வங்கியில் கடந்த 2008–ல் வங்கி கணக்கு தொடங்கினேன். மேற்படி வங்கி கணக்கின் Authorized Signatory நான்தான். கடந்த 01.02.2017 ஆம் தேதி

போடப்பட்ட உடன்படிக்கையின்படி இவ்வழக்கின் புகார்தாரர் எனது மில்லை நடத்திவந்ததால் எனது மில்லின் வங்கி கணக்கிற்கு வரும் தொகைகளை எடுப்பதற்காக எனது மில் பெயரில் உள்ள காசோலை புத்தகத்தையும், மில்லின் GST கணக்கையும் உபயோகம் செய்துகொள்ள கேட்டார். அதன்படி வங்கி கணக்கிலிருந்து பணம் எடுக்க தேவை ஏற்படும்போது என்னிடம் வந்து காசோலையை நிரப்பி கையொப்பம் வாங்கிக்கொள்ளவார். நான் எனது மில் பெயரில் உள்ள காசோலை புத்தகத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்கிறேன். **(இம்மானுவேல் பேப்பர் & போர்ட்ஸ் காசோலை புத்தகம் எ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனக்கு எழுதவும் தெரியாது, படிக்கவும் தெரியாது கையொப்பம் மட்டும்தான் இடுவேன். கடந்த 04.07.2017 ஆம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் என்னிடம் வந்து நான் கொடுத்த காசோலை புத்தகத்தில் ரூ.500/- என்று நிரப்பி கையொப்பம் கேட்டார், நான் எதற்கு என்று கேட்டதற்கு கலெக்ஷனுக்கு தாக்கல் செய்து செக்பண்ணணும் என்று கேட்டார். நானும் புகார்தாரரின் மீது இருந்த நம்பிக்கையின் பெயரில் கையொப்பம்(Signature) மட்டும் இட்டு கொடுத்தேன்.

3. அதன் பிறகு மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தார என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் அவ்வப்போது புகார்தாரர் கையொப்பம் வாங்கிய காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால் இவ்வழக்கின் காசோலையை மட்டும் தாக்கல் செய்யாமல் கையில் வைத்திருந்த விபரம் எனக்கு வங்கியிலிருந்து வரவு செலவு கணக்கை வாங்கியபிறகுதான் தெரியவந்தது. கடந்த 01.01.2016 முதல் 31.012.2017 க்கான எனது மில்லையின் வங்கி கணக்கு அறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்கிறேன். **(கடந்த 01.01.2016 முதல் 31.012.2017-க்கான எனது மில்லையின் கனரா வங்கி கணக்கு அறிக்கையின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கம்போல் எ.சா.ஆ.5 ஆவணத்தின்படி கடந்த 31.01.2020 வரை மில்லை நடத்திவந்தார். அதன்பிறகு மில்லிலிருந்து வெளியேரிவிட்டார். பொதுவாக என் மில்லை வாடகைக்கு எடுத்து நடத்தி வருவர்கள் விட்டு செல்லும்போது ஏற்படும் பராமரிப்பு செலவு பேசி கொடுத்துவிட்டு செல்வார்கள். அதன்படி நானும் இவ்வழக்கின் புகார்தாரர் மில்லை கடந்த 31.01.2020 ஆம் தேதி விட்டுச்செல்லும்போது பராமரிப்பு செலவுபற்றி பேசியதற்கு அவருடைய அட்டைகள் மில்லில் இருப்பதாகவும் பிறகு பேசி சரிபார்த்துக்கொள்ளலாம்

என்று கூறினார். ஆனால் அதன்பிறகு புகார்தாரர் பேச வரவில்லை. அதனால் நான் பராமரிப்பு செலவை கணக்கு செய்து பார்த்ததில் ரூ.97,350/– வந்தது, அதனை புகார்தாரரிடம் பலமுறை கேட்டதற்கு காலம் கடத்திக்கொண்டே வந்தார். பிறகு புகார்தாரரை மறுபடியும் கைபேசி மூலமாக மேற்படி பராமரிப்பு தொகையை கேட்டதற்கு இதேபோல் என்னை தொந்தரவு செய்தால் உங்களை சிக்கலில் மாட்டிவிடுவேன் என்று மிரட்டினார்.

4. புகார்தாரர் எனக்கு 20.03.2020 தேதியிட்ட ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார். அதன்பிறகு நான் இவ்வழக்கில் ஆஜராகி வந்துகொண்டிருந்தேன். இந்நிலையில் கடந்த 24.01.2021 ஆம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் என்னிடம் வந்து பிரச்சனை செய்தார், அதனால் நான் சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் புகார்தாரர் மீது புகார் அளித்தேன். அதன்படி கடந்த 19.02.2021 ஆம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்கிறேன். **(முதல் தகவல் அறிக்கை (FIR No.21/2021) மற்றும் புகார் நகல் எ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. புகாரில் சொல்லியுள்ளவாறு நான் எனது மில்லை புகார்தாரருக்கு விற்பனை செய்ய முன்வரவில்லை என்றும், எனக்கு எந்த ஒரு பணமும் தேவைப்படவில்லை. மேலும் எனக்கு 4 வங்கியில் கணக்கு உள்ளது. போதிய வருமானமும் உள்ளது. எனது போதிய வருமானம் உள்ளதற்கு ஆதரவாக என் வங்கி கணக்கு அறிக்கைகளை இவ்வழக்கில் தாக்கல் செய்கிறேன். **(போடிபட்டி கர்பரேசன் வங்கி கணக்கு அறிக்கை 04.11.2016 முதல் 04.11.2017 வரை உள்ள சான்றிட்ட நகல் எ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மடத்துக்குளம் கனரா வங்கி கணக்கு அறிக்கை 01.01.2018 முதல் 31.12.2021 வரை உள்ள சான்றிட்ட நகல் எ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (சாமிநாதபுரம் SBI வங்கி கணக்கு அறிக்கை 01.01.2019 முதல் 31.12.2019 வரை உள்ள சான்றிட்ட நகல் எ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் என்னுடைய மில்லின் மதிப்பு பல கோடி ரூபாய் வரும் என்றும், ஆனால் புகார்தாரர் எனது மில்லை ரூ.35,00,000/–க்கு விலை பேசியதாக பொய்யாக சொல்லியுள்ளார். எனக்கு பணம் தேவைப்பட்டிருந்தால் நான் மேற்படி மில்லை கோடி ரூபாக்கு விற்றிருப்பேன். எனக்கு புகாரில் சொல்லியுள்ளவாறு எந்த பணம் தேவைப்படவில்லை. எனது மில்லின் சர்வே எண்.407/3A1–ற்கான வழிகாட்டி மதிப்பு மற்றும் சொத்து மதிப்பீடை இவ்வழக்கில்

தாக்கல் செய்கிறேன். **(சர்வே எண்.407/3A1−ற்கான வழிகாட்டி மதிப்பு மற்றும் சொத்து மதிப்பீடு கணினி நகல் எ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. புகார்தாரர் எனது காசோலையை தவறுதலாக பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதனால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**(புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகேளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in Open Court and read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S MOHANRAJ

Digitally signed by S MOHANRAJ
Date: 2026.07.10 10:40:00 +0530

Judicial Magistrate,
Fast Track Court,
(Magisterial Level)
Palani.